1975 நவம்பர் 12] *[டாக்டர் எச். வி. ஹாண்டே]*

அதற்கு பிறகு ஸ்டேட் கவர்ன்மென்ட் அவர்களைக் கேட்டிருக்கிறீர்களாம், பணம் கொடுக்கத் தயாரா என்று கேட்டிருக்கிறீர்கள், அதற்கு நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்களாம். அந்த அடிப்படையில் மத்திய அரசு சொல்லிய பிறகு பே ரிவிஷனைப் பொறுத்தவரையில் நீங்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்? ஜூன் மாதம் முடிந்தது இப்பொழுது நவம்பர் மாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த 5 மாதங்களில் என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்? பே ரிவிஷனைப் பற்றி இந்த மன்றத்திற்கு என்ன சொல்ல வேண்டுமென்று கருதுகிறீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பே ரிவிஷனைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இன்டரிம் ரிலீஃப் கொடுத்திருக்கிறோம். ஆகவேதான் தொழிலாளர்கள் அமைதியாக இருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Interim relief is only regarding D.A. So far as wages are concerned, there is nothing done.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேஜ் ரிவிஷனைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. சிக்கிரம் முடிந்து விடும்; மின்சார வாரியத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1—12—1975-க்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளைச் சொல்வதற்கு நேரம் இல்லை. எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் பதில் இருக்கிறது. எல்லோரும் பசியோடு இருக்கிறார்கள். அதிகமாகக் காக்க வைப்பது நல்லது அல்ல என்பதால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைப்பது குறித்த தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன்மொழிவார்கள்.

(7) அரசினர் தீர்மானம்

பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்த பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால்

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 நவம்பர் 12

"பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது ஒரு மோஷன் மாதிரிதான். This is a resolution. Before tha t is put to vote, நெக்ஸ்ட் டைம் டிசம்பரிலா அல்லது எப்பொழுது கூட்டுவதாக இருக்கிறது? அதுசம்பந்தமாக அரசாங்கத்தின் கருத்து என்ன? ஒரு குழப்பம் ஏற்பட்டு அதனல் இந்த ரெசல்யூஷன் முறை வந்தது. அந்த விவரத்தைத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறேன். மீண்டும் கூட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா? முதலமைச்சருக்கு அது பற்றித் தெரிந்தால், அதைச் சொன்னல் அதற்கேற்றபடி இந்த மோஷனுக்கு ஓட்டு போடலாமா வேண்டாமா என்பதைப் பற்றி தீர்மானிக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைப்பற்றிய விவாம் சொல்லலாம் என்றுதான் நேற்று வானொலியில் ஆவலோடு எதிர்பார்த்தேன். எதுவுமே கிடைக்கவில்லை.

2. தகவல் கோரல்.

(ஆ) ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எவருக்கும் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டிருக்கிறதா என்பது குறித்து

THIRU K. T. K TANGAMANI : Because today is the last day, some information is being spread in the lobby that one of the I.A.S. Officers has been compulsorily retired. This is the first time in Tamil Nadu that an I.A.S. Officer is being retired. I want to know whether there is any truth in that rumour.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பெயரைச் சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே தங்கமணி: நம்பியார் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ரிடையர் செய்யப்பட்டிருக்கிறர் என்று லாபியில் பேசப்படுகிறது, அது உண்மையா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: இன்னும் வேறு எதாவது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை ரிடையர் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறர்களா? இதோடு சேர்த்து. இந்த ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரி மட்டும்தானு? வேறு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்மீதும் கை வைப்பதற்கு முடிவு செய்திருக்கிறதா என்பதை விளக்கமாகச் சொன்னல் நன்ருக இருக்கும்.